Dinamani 8.6.25

# அவினாசிலிங்கம் மகளிர் கல்வி நிறுவனத்தில் ஆராய்ச்சி-சமூக மேம்பாட்டு மையம் தொடக்கம்



அவினாசிலிங்கம் கல்வி நிறுவனத்தில் நடைபெற்ற சிசல் அமைப்புகளுக்கான மையம் திறப்பு விழாவில் பேசிய இந்திய அறிவியல் மற்றும் தொழில் துறை ஆராய்ச்சி மன்றத்தின் தலைமை இயக்குநர் என்.கலைச்செல்வி.

**கோவை, ஜூன் 7:** கோவை அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனத்தில் நிலைத்த சிசல் அமைப்புகளுக்கான மையம் அண்மையில் தொடங்கப்பட்டது.

கோவை அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர் கல்வி நிறுவனம், நிலைத்த சிசல் அமைப்புகளுக்கான மையம் என்ற புதிய ஆராய்ச்சி மற்றும் சமூக மேம்பாட்டு மையத்தை அண்மையில் தொடங்கியது. கல்வி நிறுவனத்தின் வேந்தரும், நிர்வாக அறங்காவலருமான டி.எஸ்.கே.மீனாட்சிசுந்தரம் தலைமை வகித்தார். பதிவாளர் ஹெ.இந்து வரவேற்றார். துணைவேந்தர் வை.பாரதி ஹரிசங்கர் வாழ்த்தினார்.

இந்திய அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி மன்றத்தின் தலைமை இயக்குநரும், அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி துறையின் செயலருமான என்.கலைச்செல்வி திறந்துவைத்து சிறப்புரையாற்றினார்.

போபால் நிறுவன இயக்குநர் தல்லாடா பாஸ்கர், சிசல் சார்ந்த தொழில்கள் இந்தியாவின் உயிரியல் பொருளாதார வளர்ச்சிக்கும், கிராமப்புற வேலைவாய்ப்புக்கும் வழங்கும் பங்களிப்பு குறித்து எடுத்துரைத்தார்.

ஆராய்ச்சி, புதுமை, நிலைத்த வளர்ச்சி மற்றும் சமூகப்பொறுப்பு ஆகிய துறைகளில் நிறுவனம் தொடர்ந்து முன்னெடுக்கும் முயற்சிகளின் ஒரு முக்கியமான மைல்கல்லாக இந்த மையம் அமையும் என நிர்வாகத்தினர் தெரிவித்தனர். ஆர்.வனிதாமணி நன்றி கூறினார்.